தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

9.03.2013 A.M

## 1000 ஏக்கர் நெற்பயிர் நீரில் மூழ்கியது



பருவம் தவறிய பெய்த மழையால் திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், மணிமுத்தாறு பகுதிகளில் சுமார் 1,000 ஏக்கரில் நெற்பயிர் நீரில் மூழ்கி சேதமடைந்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு பல லட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த 2012-ஆம் ஆண்டு தென்மேற்குப் பருவமழையும், வடகிழக்குப் பருவமழையும் சரிவர பெய்யாததால் திருநெல்வேலி மாவட்ட அணைகளின் நீர்மட்டம் உயரவில்லை.

இதற்கிடையே, கடந்த அக்டோபர் மாதம் அணைகளில் உள்ள நீர்இருப்பைக் கொண்டு பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதையடுத்து, விவசாயிகள் பிசான பருவ சாகுபடி பணிகளைத் தொடங்கினர். எனினும் வடகிழக்குப் பருவமழை கை கொடுக்காத நிலையில் விவசாயிகள் முழு அளவில் நடவு செய்யவில்லை. மூன்றில் ஒரு பங்கு மட்டுமே பயிர் செய்தனர்.

கர்நாடகா பொன்னி, அம்பை 16, ஆடுதுறை 45 போன்ற நெல் ரகங்களை விவசாயிகள் நடவு செய்தனர். பிசான பருவ அறுவடை தொடங்கிய நிலையில், திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்த மழையால் அறுவடை பாதிக்கப்பட்டது.

இதனால் அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, வி.கே.புரம், வீரவநல்லூர், சேரன்மகாதேவி, மணிமுத்தாறு பகுதிகளில் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின.

இதுகுறித்து திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் சங்கச் செயலர் ஆர். கசமுத்து:

கீழஆம்பூரில் 90 சதவீதம் நெல் அறுவடை முடிந்துவிட்டது. கடையம், ஆழ்வார்குறிச்சி பகுதிகளில் சுமார் 800 ஏக்கரில் அறுவடை செய்யும் பருவத்தில் நெற்பயிர் சாய்ந்து நீரில் மூழ்கியுள்ளது. இதனால் 200 ஏக்கர் பாதிக்கக்கூடும் என்றார்.

மணிமுத்தாறு, கீழ்முகம், ஏர்மாள்புரம், ஆலடியூர், செட்டிமேடு பகுதியில் அறுவடை செய்யாத நிலையில் ஆடுதுறை 45 ரக நெற்பயிர் சுமார் 200 ஏக்கரில் சாய்ந்து விட்டது. வயலில் தேங்கியுள்ள நீரை விவசாயிகள் வடிய வைத்து வருகின்றனர். இருந்தபோதிலும் நெல் கரை சேர்க்க வாய்ப்பில்லை.

விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபாய் இழப்பு: ஒரு ஏக்கரில் பயிர் செய்தால் 40 மூட்டை நெல் கிடைக்கும். அம்பாசமுத்திரம், மணிமுத்தாறு, வீரவநல்லூர், ஆழ்வார்குறிச்சி பகுதிகளில் சுமார் 1,000 ஏக்கர் நீரில் மூழ்கி சேதமடைந்த நெற்பயிரை இனி அறுவடை செய்ய வாய்ப்பில்லை. இதனால் பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

ஒரே நாளில் பாபநாசம் அணை 18 அடி உயர்ந்தது: மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப் பிடிப்பு பகுதியில் பெய்த பலத்த மழையால் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு உள்ளிட்ட அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது.

நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை நீடித்து வருவதால் அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக உள்ளது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 7482.71 கன அடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 3222 கனஅடியும், கடனாநதி அணைக்கு விநாடிக்கு 207.18 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 25 கன அடியும் நீர்வரத்து இருந்தது.

பாபநாசம் 18 அடி உயர்ந்தது: பாபநாசம் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை நிலவரப்படி 18 அடி உயர்ந்து 70.00 அடியாக இருந்தது. சேர்வலாறு அணை நீர்மட்டம் 8 அடி உயர்ந்து 80.05 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 3.70 அடி உயர்ந்து 87.50 அடியாகவும் இருந்தது. இதேபோல கடனாநதி அணையின் நீர்மட்டம் 3.20 அடி உயர்ந்து 60.20 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 48.50 அடியாகவும் இருந்தது.

**வேளாண் கடனில் ஊழல் செய்தவர்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்ய வேண்டும்**
வேளாண் கடனில் ஊழல் செய்தவர்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்ய வேண்டும் எனத் தமிழக உழவர் முன்னணி வலியுறுத்தி உள்ளது.

இது குறித்து தமிழக உழவர் முன்னணி ஆலோசகர் கி.வெங்கட்ராமன் வெளியிட்ட அறிக்கை: வங்கிகள் வழங்கிய வேளாண் கடனில் ஏறத்தாழ ரூ.52 ஆயிரம் கோடி அளவுக்கு முறைகேடு நடத்துள்ளதாக அரசு தலைமைத் தணிக்கை அதிகாரி அறிக்கை வெளியிட்டுள்ளார். விவசாயிகள் பெயரால் நடந்துள்ள இந்த மாபெரும் ஊழல் நாட்டையே அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

அரசுடைமை வங்கிகள் வழங்கிய வேளாண் கடன்களில் 23 விழுக்காடு போலியானவை எனக் கண்டறியப்பட்டுள்ளது. ஆவணங்களைத் திருத்தியும், போலி கையொப்பமிட்டும் நடைபெற்ற

மோசடிகள் மட்டுமின்றி வேளாண் கடன் பெறத் தகுதி இல்லாதவர் பலரும் விவசாயிகள் பெயரால் வங்கிக் கடன் பெற்றுள்ளனர். இதனால் 2008-ஆம் ஆண்டு மத்திய அரசு அறிவித்த கடன் தள்ளுபடி சலுகையை விவசாயிகள் அல்லாத பலரும் பெற்று சட்டவிரோதமாக பயனடைந்துள்ளனர்.

இக்கடன் தள்ளுபடி அறிவிக்கப்பட்ட காலத்திலேயே வங்கிகள் அறிவித்த புள்ளி விவரங்களை ஆதாரமாகக் காண்பித்து இதில் நடந்துள்ள முறைகேடுகளை தமிழக உழவர் முன்னணி சுட்டிக்காட்டி உள்ளது.

வேளாண்மை வகையினத்தின் கீழ் மோட்டார் பம்பு செட்டுகள், உரம், பூச்சிக்கொல்லி, விதை தயாரிப்பு, உணவு பதப்படுத்துதல் உள்ளிட்ட பல தொழில் நிறுவனங்களை மத்திய அரசு கடந்த 2007-ல் கொண்டு வந்தது. இதுதான் இந்த மாபெரும் ஊழலுக்கு சட்டவாய்ப்பைத் திறந்துவிட்டது.

எனவே வேளாண் கடன்களை மோசடியாகப் பெற்ற நிறுவனங்கள், தனி நபர்கள் மீதும், இந்த முறைகேட்டுக்கு உடந்தையாக இருந்த வங்கி அதிகாரிகள், அரசியல் புள்ளிகள் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இந்த முறைகேட்டில் ஈடுபட்டவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டும். அது மட்டுமின்றி அரசு வங்கிகளில் வேளாண்மை என்ற பெயரால் தொழில் நிறுவனங்களும், வேளாண்மைக்குத் தொடர்பில்லாத தனி நபர்களும் கடன் பெறுவதற்கு உள்ள அரசின் கொள்கை முடிவுகளை உடனடியாகக் கைவிட வேண்டும்.

வேளாண்மை என்ற பெயரில் விவசாயிகளுக்குப் பயிர்க்கடன் மட்டுமே வழங்கப்படுவதற்கு உறுதியான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வேளாண் சந்தை நுண்ணறிவு மையம்: அண்ணாமலை பல்கலை.யில் தொடக்கம்**

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் பொருளாதாரத் துறையில் வேளாண் சந்தை நுண்ணறிவு மையம் தொடக்க விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

வேளாண்புல முதல்வர் ஆர்.எம்.கதிரேசன் தலைமை வகித்தார். வேளாண் பொருளாதாரத் துறை தலைவர் கே.ஆர்.சுந்தரவரதராஜன் வரவேற்றார். துணைவேந்தர் எம்.ராமநாதன் மையத்தைத் தொடங்கி வைத்துப் பேசியது:

விவசாயிகள் தங்க விளைபொருட்களை, குறிப்பாகக் காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை சேமித்து வைக்க முடியாமல் உடனே விற்றுவிடும் நிலையில் உள்ளனர். அதனால் குறைந்த லாபத்தையே விவசாயிகள் பெற முடிகிறது.

இத்தகைய சூழலில் இது போன்ற வேளாண் சந்தை நுண்ணறிவு மையம் தரும் தகவல்களைப் பயன்படுத்தி தேவையான சந்தையைத் தேர்வு செய்து விவசாயிகள் நல்ல விலையைப் பெற முடியும். மேலும் திட்டமிட்டு பயிர் செய்யவும் இத்தகவல்கள் பேருதவி புரியும் என்றார். கடலூர் மாவட்ட வேளாண் விற்பனைக்குழு செயலாளர் பி.ஹரிதாஸ், கடலூர் மாவட்ட தகவல் மைய அதிகாரி எஸ்.அருள்மொழி ஆகியோர் சிறப்புரையாற்றினர். உழவர் சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் பி.ரவீந்திரன் உள்ளிட்ட விவசாயிகள் மற்றும் வேளாண்துறை மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர். வேளாண் பொருளாதாரத்துறை பேராசிரியர் ஜி.ராமநாதன் நன்றி கூறினார்.

**உழவர் பாதுகாப்புத் திட்டம்: ரூ.12 லட்சம் நலஉதவி**

உத்தரமேரூர் தாலுகா, குண்ணவாக்கம் கிராமத்தில் மனுநீதி நாள் முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

ஒன்றியக்குழு தலைவர் ஆர்.கமலக்கண்ணன், துணைத் தலைவர் அ.ரவிசங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உத்தரமேரூர் வட்டாட்சியர் கே.தேவராஜன் வரவேற்றார். சட்டப்பேரவை உறுப்பினர் வாலாஜாபாத் பா.கணேசன், வருவாய் கோட்ட அலுவலர் க.சக்திமணி ஆகியோர் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இதில், ரூ.1 லட்சத்து 26 ஆயிரத்து 100 மதிப்பில் வீட்டு மனைப்பட்டா, உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முதியோர் உதவித் தொகை ரூ.10 லட்சத்து 44 ஆயிரம், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை ரூ.95 ஆயிரம்,

திருமண உதவித் தொகை ரூ.56 ஆயிரம், வீட்டுமனை ஒப்படை பெறும் பயனாளிகளுக்கு ரூ.1 லட்சத்து 26 ஆயிரம் வழங்கப்பட்டது. தொகுதி செயலாளர் கே.ஆர்.தருமன், கிழக்கு, மேற்கு ஒன்றிய செயலாளர்கள் கே.பிரகாஷ்பாபு, வி.ஆர்.அண்ணாமலை,

மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற துணைத் தலைவர் குண்ணவாக்கம் ஆர்.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் சுமதி குணசீலன், ஒழையூர் ஆர்.நாராயணசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர். தனி வட்டாட்சியர் கே.கிரிஜா நன்றி கூறினார்.

**ஒழுங்குமுறை கூடத்தில் கொள்முதல் பொருள்களை எடுக்க 24 மணி நேர கெடு**

விழுப்புரம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில், வியாபாரிகள் கொள்முதல் செய்யும் பொருள்களை 24 மணி நேரத்துக்குள் எடுக்க வேண்டும் என விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது.

விழுப்புரம் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புதன்கிழமை சுற்றுப்பகுதியிலிருந்து 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் நெல்லை விற்பனை செய்யக் கொண்டு வந்திருந்தனர்.

அன்று அதிகாலை முதல் மதியம் வரை தொடர்ந்து மழை பெய்ததால், விவசாயிகள் விற்பனைக்குக் கொண்டு வந்த நெல் மூடைகள் மழையில் நனைந்தது. விவசாயிகள் நெல்லை பாதுகாப்பாக வைத்து விற்பனை செய்ய விற்பனைக் கூடத்தில் 3 குடோன்கள் உள்ளன. இதில் வியாபாரிகள் கொள்

முதல் செய்த நெல் மூடைகளை பாதுகாப்பாக வைத்திருந்ததால், விவசாயிகள் விற்பனைக்கு கொண்டுவந்த நெல் மூட்டைகளை வைக்க முடியாமல் மழையில் நனைந்தது.

இதனால், வியாபாரிகள் மழையில் நனைந்த மூட்டைகளுக்கு ரூ.100 முதல் ரூ.140 வரை விலையை குறைத்தனர். இதனால் ஆவேசமடைந்த விவசாயிகள் புதுச்சேரி சாலையில் மறியலில் ஈடுபட்டனர்.

பின்னர் விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் முடிவு எட்டப்படாமல் தோல்வியில் முடிந்தது. பின்னர் வியாழக்கிழமை காலை பேச்சுவார்த்தை நடப்பதாக அறிவிக்கப்பட்டது.

அன்று காலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வட்டாட்சியர் ரவிகண்ணன், கண்காணிப்பாளர் கிருஷ்ணதாஸ் உள்ளிட்ட அதிகாரிகள் காத்திருந்தனர். ஆனால் பேச்சுவார்த்தைக்கு வியாபாரிகள் வரவில்லை.

இதையடுத்து, மாலையில் விழுப்புரம் கோட்டாட்சியர் சுபோத்குமார்(பொறுப்பு), தலைமையில், கோட்டாட்சியர் அலுவலகத்தில் மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்கியது. இதில் விழுப்புரம் வட்டாட்சியர் ரவிக்கண்ணன்,

கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் சேதுராமன், ஒழுங்குமுறை விற்பனைக்கூட செயலாளர் ஞானவேல், கண்காணிப்பாளர் கிருஷ்ணதாஸ், நெல், அரிசி வியாபாரிகள் சங்கத் தலைவர் ஆர்.குபேரன், விக்கிரவாண்டி சட்டப்பேரவை உறுப்பினர் ஆர். ராமமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இரவு 9.30 வரை பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படும் பொருள்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூட குடோனிலிருந்து 24 மணி நேரத்துக்குள் எடுக்க வேண்டும்.

அதற்கு காலஅவகாசம் வேண்டுமானால், முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளின் பொருட்களைத் திறந்தவெளியில் வைக்காமல் பாதுகாப்பாக வைக்க விற்பனைக்கூட நிர்வாகம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பொருள்களுக்குரிய பணம் பட்டுவாடாவில் ஒரு குறிப்பிட்ட தொகையை அதாவது ரூ.20 ஆயிரம் வரை 24 மணி நேரத்துக்குள் கொடுக்க வேண்டும்.

ரூ.20 ஆயிரத்துக்கு மேல் இருந்தால் பணம் பட்டுவாடா 3 நாட்களுக்குள் வழங்க வேண்டும். நேரடி கொள்முதல் நிலையங்கள் தொடங்க விவசாயிகள் வைத்த கோரிக்கையை பரிசீலனை செய்ய மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

மார்ச் 6-ஆம் தேதி மழையில் நனைந்து போன சுமார் 500 நெல் மூட்டைகளுக்கு ஏற்கெனவே விவசாயிகளுக்கு வியாபாரிகள் குறிப்பிட்ட தொகையை விட இழப்பீடாக ரூ.60 கூடுதலாக வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

**கத்தரியில் விதை பரிசோதனை: விவசாயிகளுக்கு அழைப்பு**

திருவள்ளூர் மாவட்டத்தில் கத்தரிக்காய் விதைப் பரிசோதனை செய்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விதைப் பரிசோதனை அலுவலர் பி.முத்துகிருஷ்ணன் வெளியிட்ட அறிக்கை:

காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிகமாக கத்திரி பயிரிட்டு வருகின்றனர்.

இதில், சராசரியாக ஒரு ஏக்கருக்கு 8 மெட்ரிக் டன் மகசூல் பெறலாம். அதற்கு தரமான கத்தரி விதைகள் இருப்பது அவசியம்.

மேலும் நாற்றங்கால் அமைக்க ஏக்கருக்கு 160 கிராம் விதைகள் தேவை. நாற்றங்காலில் இருந்து கத்தரிச் செடியை நடவுச் செய்யும் போது 60ஷ்60 செ.மீ. இடைவெளியில் நடவுச் செய்ய வேண்டும்.

கத்தரி விதையின் குறைந்தபட்ச முளைப்புத்திறன் 70 சதவீதம் இருந்தால்தான் செடிகளின் எண்ணிக்கையை பராமரித்து அதிக மகசூல் பெற முடியும்.எனவே கத்தரி சாகுபடி செய்யும் விவசாயிகள், பருவத்தில் விதைக்க தங்களிடம் இருப்பில் உள்ள விதையில் இருந்து 150 கிராம் மாதிரி எடுத்து வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை ஆய்வகம், 48, ஜே.என். சாலை, பெரியகுப்பம், திருவள்ளூர் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பலாம்.

இதற்கான பரிசோதனைக் கட்டணமாக ரூ.30-ஐயும் அனுப்ப வேண்டும். விதை பெறப்பட்ட நாளில் இருந்து 14 நாள்களில் விதையின் தரத்தை அறிந்துக் கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பல்லடத்தில் கடும் வறட்சியால் தீவனப் பற்றாக்குறை**

பல்லடம் பகுதியில் தீவனப் பற்றாக்குறை காரணமாக கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறன் குறைந்ததால், அடிமாட்டு விலைக்கு கால்நடைகளை விற்க வேண்டிய பரிதாப நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

திருப்பூர் மாவட்டம், பல்லடம் பகுதியில் விவசாயம் சார்ந்த தொழிலாக கால்நடை வளர்ப்பு உள்ளது. மாடுகளுக்குத் தேவையான தீவனப் பயிர், சோளத்தட்டுகளை தங்களது விவசாய நிலங்களிலேயே விவசாயிகள் உற்பத்தி செய்து கறவை மாடுகளுக்கு வழங்கி வந்தனர். அதன் மூலமாக பால் உற்பத்தி செய்து அரசு கூட்டுறவு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு பாலை விற்று கணிசமான வருவாயை ஈட்டி வந்தனர்.

இந் நிலையில், இந்தாண்டு பருவமழை பொய்த்துப் போனதால் கிணறுகளில் தண்ணீர் வற்றியதால் கால்நடைகளுக்கு தீவனத் தட்டுப்பாடு ஏற்பட்டது. மேச்சல் நிலத்தில் கிடைக்கும் பசுந்தீவனமும் வறட்சி காரணமாக கறவை மாடுகளுக்கு கிடைக்காத நிலை ஏற்பட்டது. காய்ந்த சோளத்தட்டுக்கும் கிராக்கி ஏற்பட்டதால், அதிக விலை கொடுத்து வெளியூரில் இருந்து விவசாயிகள் வாங்கி வருகின்றனர்.

தீவனத் தட்டுப்பாடு காரணமாக தினமும் 20 லிட்டர் வரை பால் தரும் கறவை மாடுகள், இப்போது 5 லிட்டர் அளவே தருகிறது. இதனால், மாடுகளை அடிமாட்டு விலைக்கு விற்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் வேதனைப்படுகின்றனர். இதுபோன்ற தீவனப் பஞ்சம் கடந்த 25 ஆண்டுகளாகப் பார்த்தறியாதது. கால்நடைகளைக் காப்பாற்றவும், பால் உற்பத்தியைப் பெருக்கவும் பருத்திக்கொட்டை, புண்ணாக்கு உள்ளிட்ட தீவன மூலப் பொருள்களை ரேஷன் கடைகளில் மானிய விலையில் தமிழக அரசு வழங்க வேண்டும். இதேநிலை நீடித்தால் பாலுக்கு

தட்டுப்பாடு ஏற்படுவதோடு கால்நடை வளர்ப்பும் முற்றிலும் அழிந்துவிடும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**சின்னவெங்காயம் விலை வீழ்ச்சிபல்லடம் விவசாயிகள் ஏமாற்றம்**

பல்லடம் பகுதியில் சின்ன வெங்காயம் அறுவடை தீவிரமாக நடைபெறுகிறது. ஆனால், கட்டுப்படியான விலை கிடைக்காததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

திருப்பூர் மாவட்டம், பல்லடம் சுற்று வட்டாரத்தில் கவுண்டம்பாளையம், கணபதிபாளையம், காளிநாதம்பாளையம், உகாயனூர், குருநாதம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் 500-க்கும் மேற்பட்ட ஏக்கரில் சின்னவெங்காயம் சாகுபடி செய்யப்பட்டு, இப்போது அறுவடைப் பணிகள் நடைபெறுகின்றன. இந் நிலையில், இந்தாண்டு பருவமழை பொய்த்ததால் ஏக்கருக்கு 10 குவிண்டால் கிடைக்க வேண்டிய வெங்காயம், 5 குவிண்டாலாக குறைந்துள்ளது.

உரம், பூச்சிமருந்து விலை உயர்வு, விவசாய வேலைக்கு ஆள்கள் தட்டுப்பாடு போன்றவற்றால் விவசாயமே கேள்விக்குறியான நிலையில், சின்னவெங்காயம் கிலோ ரூ.18 முதல் ரூ.20 வரையே விற்பனையாகிறது. இந்த விலை வீழ்ச்சியால் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும், கிலோ ரூ.30-க்கு விற்றால்தான் கட்டுப்படியாகும் என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

காளிநாதம்பாளையத்தைச் சேர்ந்த விவசாயி பழனிசாமி கூறுகையில், சின்ன வெங்காயம் சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை முதலீடு செய்துள்ளோம். விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளோம். கிலோ ரூ.30-க்கு விற்றால்தான் கட்டுப்படியாகும். இதுபோன்ற விலை வீழ்ச்சிக் காலங்களில் நஷ்டத்தில் இருந்து விவசாயிகளைப் பாதுகாக்க வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசு சிறப்பு அனுமதி வழங்க வேண்டும் என்றார்.

**பவானிசாகர் நீர்மட்டம் ஒரே நாளில் 3 அடி உயர்வு**

பில்லூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டதால், பவானிசாகர் அணை நீர்மட்டம் ஒரே நாளில் 3 அடி உயர்ந்துள்ளது.

பவானிசாகர் அணையின் அதிகபட்ச நீர்மட்டம் 120. இதில் 15 அடி சேறும் சகதியுமாக உள்ளது. நீலகிரி நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்யும் மழையும், மோயாறு நீரும் அணையின் முக்கிய நீராதாரமாக உள்ளன.

தெங்குமரஹாடா வனப்பகுதியில் போதிய மழை பெய்யாததால், மோயாறிலும் நீரோட்டம் குறைந்துவிட்டது. இதனால் பவானிசாகர் அணையின் சராசரி நீர்வரத்து வெகுவாகக் குறைந்து, தினமும் 250 கனஅடியாகச் சரிந்துவந்தது.

பருவமழை பொய்த்ததால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து குறைந்து, அணையின் நீர் மட்டம் படிப்படியாகக் குறைந்து, வியாழக்கிழமை (மார்ச் 7) காலை 33 அடியாகச் சரிந்திருந்தது.

இதையடுத்து, அணையின் நீர்மட்டத்தைச் சீராக வைத்திருக்க, பில்லூர் அணையில் இருந்து பவானிசாகர் அணைக்கு வியாழக்கிழமை காலை 6 ஆயிரம் கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது.

இந்த நீர்வரத்து வெள்ளிக்கிழமை மாலை வரை நீடித்தது.

இதனால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 3 அடி அதிகரித்து, வெள்ளிக்கிழமை மாலை 6 மணி நிலவரப்படி 36.73 அடியாக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு இதே நாளில் அணையின் நீர்மட்டம் 66 அடியாக (9.67 டி.எம்.சி. இருப்பு) இருந்தது குறிப்பிடத்தக்கது.

நீலகிரி வனக்கோட்டம், கோத்தகிரி, மஞ்சூர், குந்தா பகுதிகளில் கடந்த சில நாள்களாக மழை பெய்வதால் பவானிசாகர் நீர்ப்பிடிப்புப் பகுதிகளுக்கு நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளதாக, அணையின் உதவி செயற்பொறியாளர் பொங்கியண்ணன் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

**வேலூர் மாவட்டத்தை அரசு வறட்சி மாவட்டமாக அறிவித்துள்ள நிலையில் வருவாய்த் துறையினர் நில வரி வசூல் செய்வதை நிறுத்த வேண்டும் என்று விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் கோரிக்கை வைக்கப்பட்டது**

வேலூர் மாவட்டத்தை அரசு வறட்சி மாவட்டமாக அறிவித்துள்ள நிலையில் வருவாய்த் துறையினர் நில வரி வசூல் செய்வதை நிறுத்த வேண்டும் என்று விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் கோரிக்கை வைக்கப்பட்டது.

ராணிப்பேட்டை கோட்டாட்சியர் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் கோட்டாட்சியர் முத்துக்குமரன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அப்போது இக் கோரிக்கையை விவசாயிகள் முன்வைத்தனர்.

மேலும் விவசாயிகள் தெரிவித்த புகார்கள் மற்றும் கோரிக்கைகள் வருமாறு: கணினி சிட்டா கேட்டு வாலாஜா வட்டாட்சியர் அலுவலகத்தில் அளித்த விண்ணப்பத்துக்கு கடந்த 5 மாதங்களாக அலைகழிக்கின்றனர்.

நெமிலி பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு தடையின்றி நெல் விதை கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

வேலூர் மாவட்டத்தில் தோல் தொழிற்சாலைகளின் கழிவுநீரால் பாதிக்கப்பட்ட விளை நிலங்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும். தமிழக அரசின் மாசு கட்டுப்பாட்டு வாரியத்துக்கு மாவட்ட ஆட்சியர் மற்றும் கோட்டாட்சியர் பரிந்துரை செய்துள்ள நிலையில், அதன்பேரில் விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றனர்.

இக் கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கோட்டாட்சியர் தெரிவித்தார்.

கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் ரவி, பல்வேறு துறைகளின் அதிகாரிகள் மற்றும் ராணிப்பேட்டை வருவாய் கோட்டத்தை சேர்ந்த விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்றனர்.குடியாத்தம், மார்ச் 8: குடியாத்தத்தை அடுத்த கல்லப்பாடி ஊராட்சியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் 114 பயனாளிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டன.

கல்லப்பாடி ஊராட்சித் தலைவர் கே.ஹேமலதா தலைமை வகித்தார். கல்லப்பாடி கால்நடை உதவி மருத்துவர் எம்.ரமேஷ் வரவேற்றார். எம்எல்ஏ செ.கு. தமிழரசன், அதிமுக கிழக்கு

மாவட்டச் செயலர் எஸ்.ஆர்.கே. அப்பு ஆகியோர் பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகளை வழங்கினர்.

ஒன்றியக் குழுத் தலைவர் லட்சுமி சுகுமாரன், அதிமுக ஒன்றியச் செயலர் எஸ்.கோதண்டன், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் ஜீவரத்தினம் ஸ்ரீராமுலு, வி.முரளி, கே.ரமேஷ், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சாரதா பாலாஜி, ராஜாகுப்பம் ஊராட்சித் தலைவர் பி.எச்.இமகிரிபாபு, துணைத் தலைவர் எஸ்.முருகேசன், அண்ணா தொழிற்சங்க நிர்வாகிகள் என்.கே. ராஜாமணி, கே. தட்சிணாமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அதைத் தொடர்ந்து தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கல்லப்பாடி பள்ளிக்கு எம்எல்ஏ செ.கு. தமிழரசன் ரூ. 3 லட்சம் மதிப்புள்ள தளவாடப் பொருள்களை வழங்கினார்.

### வேலூர் சர்க்கரை ஆலையில் காத்திருந்த கரும்புகள் திருவாலங்காடு ஆலைக்கு அனுப்பபப்பட்டன!

இயந்திரப் பழுதின் காரணமாக, வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரவைக்கு அனுப்பப்படாமல் காத்திருந்த கரும்புகள் வியாழக்கிழமை முதல் திருவாலங்காடு ஆலைக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

வேலூர் அருகேயுள்ள திருவலத்தை அடுத்த அன்பூண்டியில் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இந்தாண்டுக்கான கரும்பு அரவைப் பணி கடந்த டிசம்பர் மாதம் தொடங்கப்பட்டது.

இந்நிலையில், மார்ச் 1ஆம் தேதி திடீரென பாய்லர் டர்பைன் கவர்னர் பழுதாகி இயந்திரம் நின்றுவிட்டது. இதனால், கரும்பு அரவைப் பணி நடைபெறவில்லை. இதையடுத்து, ஆலைக்கு கொண்டு வரப்பட்ட சுமார் 6 ஆயிரம் டன் கரும்பு காய்ந்துள்ளதாகவும், பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்து வந்தனர்.

இதைத் தொடர்ந்து, தமிழக அரசு மேற்கொண்ட உடனடி நடவடிக்கையைத் தொடர்ந்து ஆலை வாயிலில் காத்திருந்த கரும்பு லாரி மற்றும் டிராக்டர்கள் திருவள்ளூர் மாவட்டம் திருவாலங்காட்டில் உள்ள திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அனுப்பப்பட்டன. மேலும், வேலூர் ஆலையில் ஏற்கெனவே பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கும் திருவாலங்காடு ஆலையில் இருந்து லாரிகளும் டிராக்டர்களும் அனுப்பப்பட்டு வருவதாக ஆலை வட்டாரங்கள் தெரிவித்தன.

### வெற்றிலை விலை குறைவு: விவசாயிகள் கவலை

பரமத்திவேலூர் தினசரி ஏலச் சந்தையில் வெற்றிலை விலை குறைந்துள்ளதால், வெற்றிலை பயிர் செய்துள்ள விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

பரமத்திவேலூர் சுற்று வட்டாரப் பகுதியில் ஏராளமான ஏக்கரில் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இங்கு விளையும் வெற்றிலைகள் பரமத்திவேலூர் நான்கு சாலை பகுதியில் நடைபெறும் ஏலச் சந்தைக்கு கொண்டு வரப்பட்டு ஏலம் விடப்படும். கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் இளம் பயிர் வெள்ளைக் கொடி வெற்றிலை 104 கவுளி கொண்ட சுமை ஒன்று ரூ.4 ஆயிரத்திற்கும்,

இளங்கால் கற்பூரி வெற்றிலை சுமை ஒன்று ரூ. 2 ஆயிரத்திற்கும், முதியம் பயிர் வெள்ளைக் கொடி வெற்றிலை ரூ.1,500-க்கும், முதியம் பயிர் கற்பூரி சுமை ஒன்று ரூ.1,300-க்கும் ஏலம் போனது.

ஆனால், வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் இளம் பயிர் வெள்ளைக் கொடி வெற்றிலை 104 கவுளி கொண்ட சுமை ஒன்று ரூ.3 ஆயிரத்து 500-க்கும், இளங்கால் கற்பூரி வெற்றிலை சுமை ஒன்று ரூ. ஆயிரத்து 500-க்கும், முதியம் பயிர் வெள்ளைக் கொடி வெற்றிலை ரூ. ஆயிரத்திற்கும், முதியம் பயிர் கற்பூரி சுமை ஒன்று ரூ.700-க்கும் ஏலம் போனது.

தற்போது, வெற்றிலை வரத்து அதிகமாக இருப்பதாலும், விஷேசங்கள் அதிகமாக இல்லாததாலும் விலை சரிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**கோடை மழையில் மூழ்கிய நெற்கதிர்கள்**

கடந்த 3 நாள்களாக பெய்துவரும் கோடை மழையால் ஆலங்குடி அருகே, கீரமங்கலம் பகுதியில் சுமார் 10 ஏக்கரில் நெற்கதிர்கள் நீரில் மூழ்கியுள்ளது.

இலங்கை அருகே கடல் பகுதியில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக புதுக்கோட்டை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் கடந்த சில நாள்களாக கன மழை பெய்து வருகிறது. இந்நிலையில் கீரமங்கலம் வயல் பகுதியில் காலம் கடந்து மின்பற்றாக்குறை உள்ளிட்ட சவால்களை எதிர்கொண்டு சாகுபடி மேற்கொள்ளப்பட்ட நெற்கதிரானது அறுவடைக்கு தயாரான நிலையில் தற்போது பெய்துவரும் மழைக்கு அவைகள் அடியோடு சாய்ந்தன. கதிர்கள் முதிர்ந்திருந்ததால் முளைக்கத் தொடங்கி விட்டன. இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில்: மின்பற்றாக்குறை, மின்மாற்றி பழுதினால் சாகுபடி மேற்கொள்ளப்பட்ட பயிர்கள் கருகின. பருவமழையை நம்பி மேற்கொள்ளப்பட்ட நெல்லும் அழிந்துவிட்டதாக கூறுகின்றனர்.

**150 நாள் வேலைத்திட்டம் மூலம் பண்ணை குட்டைகள் அமைக்கலாம்**

மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் மூலம் சிறு, குறு விவசாயிகள் பண்ணைக்குட்டைகள் அமைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் மத்திய, மாநில அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வந்தது. தற்போது அரசு உத்தரவின்படி, ஒவ்வொரு குடும்பத்துக்கும் 150 நாள்கள் வேலை அளிக்கப்படவுள்ளது. 100 நாள் பணி முடித்த குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குள்பட்ட ஊராட்சிகளில் உள்ள பயனாளிகள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு தங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்ளலாம்.

மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணிபுரியும் மாற்றுத் திறனாளிகள் நாள் ஒன்றுக்கு 4 மணி நேரம் மட்டும் பணிபுரிந்தால் முழுநேர ஊதியம் ரூ.132 வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் வேளாண் பணிகளும்

மேற்கொள்ளலாம் என அரசு உத்தரவிட்டுள்ளதைத் தொடர்ந்து குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தைச் சோ்ந்த அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சிறு, குறு விவசாயிகள் தங்களுக்கு சொந்தமான நிலங்களில் அரசு நிர்ணயித்துள்ள விதிமுறைகளுக்கு உள்பட்டு பண்ணைக்குட்டைகள் அமைத்துக் கொள்ளலாம். இதில் விருப்பமுள்ளோர் தொடர்புடைய ஊராட்சித் தலைவர்கள் மற்றும் குன்றாண்டார்கோவில் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) ஆகியோரை அணுகி விண்ணப்பித்து பயன் பெறலாம்.

### புதுக்கோட்டை: மார்ச் 15 -ல் விவசாயிகள்குறை கேட்பு முகாம்

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு முகாம் மார்ச் 15-ல் (வெள்ளிக்கிழமை) நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் காலை 10.30 மணியளவில் மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் பலதுறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் விவசாயம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர். எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயம் தொடர்புடைய கோரிக்கைகளை தெரிவித்து பயன்பெறலாம்.

### நெற்கதிர்களுடன் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

வறட்சி நிவாரணம் வழங்கக் கோரி, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் காய்ந்துபோன நெற்கதிர்களை கையில் ஏந்தி விவசாயிகள் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

செங்கிப்பட்டி அருகேயுள்ள சோளகம்பட்டி, வெண்டையம்பட்டி, ராயமுன்டாண்பட்டி, பொன்விளைந்தான்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் கல்லணைக் கால்வாய் பாசனத்தை நம்பி நிகழாண்டு ஒரு போக சம்பா சாகுபடியைத் தொடங்கினர். ஆனால், தண்ணீர் வரத்து இல்லாததால் பயிர்கள் காய்ந்துவிட்டன.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு தமிழக அரசு கடந்த மாதம் வறட்சி நிவாரணம் அறிவித்தது. இதில், இந்தப் பகுதிகளுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. எனவே, வறட்சி நிவாரணம் வழங்கக் கோரி சோளகம்பட்டி, வெண்டையம்பட்டி, ராயமுன்டாண்பட்டி, பொன்விளைந்தான்பட்டி உள்ளிட்ட கிராம விவசாயிகள் கையில் காய்ந்து போன நெற்கதிர்களுடன் மாவட்ட ஆட்சியரகத்துக்கு வெள்ளிக்கிழமை சென்றனர்.

ஆட்சியரக வளாகத்தில் முழக்கங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்திய விவசாயிகள் பின்னர், ஆட்சியரகத்தில் இருந்த அலுவலர்களிடம் மனு அளித்தனர்.

### விவசாயத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க வலியுறுத்தல்

விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கும் ரூ. 10,000 வீதம் நிவாரணம் வழங்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் வலியுறுத்தியது.

தஞ்சாவூரில் இந்தச் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வரலாறு காணாத வறட்சியாலும், காவிரி தண்ணீர் கிடைக்காததாலும், கடுமையான மின்வெட்டாலும் விவசாயம் பாதிக்கப்பட்டதால், விவசாயத் தொழிலாளர்கள் வேலையின்றி குடும்பத்துடன் பட்டினியால் வாடுகின்றனர்.

வெளி மாவட்டங்களுக்கு வேலை தேடிச் சென்றாலும் மின்வெட்டால் தொழிற்சாலைகளில் வேலை கிடைக்கவில்லை. எனவே, பட்டினியால் வாடும் விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு தலா ரூ. 10,000 நிவாரணத்தை தமிழக அரசு வழங்க வேண்டும். மத்திய அரசு பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக ரூ. 1,000 கோடி அளிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட பயிர்களை மறு ஆய்வு செய்து பாதிப்புக்கு உள்ளான அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வறட்சியால் மண் கடினமாக இறுகியுள்ளது. இந்நிலையில், நூறு நாள் வேலைத் திட்டத்தில் 82 சதம் பேர் பெண்கள்தான் பணியாற்றுகின்றனர். பெண்கள், அரசு கூறும் 42 கன அடி மண்ணை வெட்டி எடுத்தால் மட்டுமே ரூ. 132 கூலி பெற முடியும். பெண்களின் உடல் நிலை போதிய ஆரோக்கியமின்றி உள்ளதால், அவர்களால் ரூ. 132 கூலியைப் பெற முடியவில்லை.

எனவே, வேலை அளவை 35 கன அடியாகக் குறைக்க வேண்டும். மத்திய அரசு கூலியை ரூ. 148 ஆக உயர்த்தி நிகழாண்டு பிப். 26-ம் தேதி அரசிதழில் வெளியிட்டுள்ளது. எனவே, ஏப். 1-ம் தேதி முதல் ரூ. 148 வழங்க வேண்டும்.

தமிழகத்தில் 25 லட்சத்துக்கும் அதிகமான குடும்பங்கள் வீட்டுமனை - பட்டா இன்றி உள்ளனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அவர்களுக்குச் சிறப்புத் திட்டம் மூலம் வீட்டுமனை வழங்க வேண்டும். ஏற்கெனவே பல்வேறு வகை புறம்போக்குகளில் குடியிருப்பவர்களுக்கு அதை வரைமுறைப்படுத்தி பட்டா வழங்க வேண்டும். அதற்கான அரசாணையைப் பிறப்பிக்க வேண்டும்.

தமிழக அரசு வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும் என வலியுறுத்தி ஏப். 2 முதல் 5 வரை வட்டாட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முன் தொடர் தர்னா போராட்டம் நடத்துவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநிலத் தலைவர் ஏ. லாசர் தலைமை வகித்தார். மாநில பொதுச் செயலர் ஜி. மணி, துணைத் தலைவர் எஸ். திருநாவுக்கரசு, மாவட்டச் செயலர் கே. பக்கிரிசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 29.26 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 29.26 அடியாக இருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 138 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 300 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

9.03.2013 A.M

## நெகமம் கொப்பரை ஏலத்தில் விலை உயர்வு : முதல் தரம் ரூ.42.10



பொள்ளாச்சி:வெளி மார்க்கெட்டில், கொப்பரை விலையில், மாற்றமின்றி சீரான விலை நிலவுவதால், நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில், விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. ஏலத்தில், முதல்தர கொப்பரை கிலோ 42.10 வரை ஏலம் போனது.பொள்ளாச்சி அடுத்த நெகமம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், இந்தவாரம் நடந்த கொப்பரை ஏலத்தில், நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் ஏலத்துக்கு கொப்பரையை கொண்டு வந்தனர். இதில், 15 விவசாயிகள் 64 மூட்டை கொப்பரை கொண்டு வந்தனர்.

ஏலத்தில், ஐந்து வியாபாரிகள் பங்கேற்று ஏலம் எடுத்தனர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) சென்னியப்பன் ஏலம் நடத்தினார்.முதல் தர கொப்பரை 46 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 40.10 ரூபாய் முதல் அதிகபட்சமாக 42.10 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 18 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 34.10 ரூபாய் முதல் அதிகபட்சமாக 36.70 ரூபாய் வரை விலை கிடைத்தது.

அதிகாரிகள் கூறியதாவது:

வெளி மார்க்கெட்டில், கொப்பரைக்கான தேவை குறைந்துள்ளதால், இரு வாரங்களாக பெரிய மாற்றம் இன்றி உள்ளது. விவசாயிகள் இருப்பு வைத்த கொப்பரையை, விற்பனை செய்து

வருகின்றனர். இதனால், கடந்த வாரத்தை விட இந்தவாரம் ஏலத்துக்கு, இரண்டு மூட்டை கொப்பரை அதிகரித்துள்ளது. வெளி மார்க்கெட்டில், ஒரு கிலோ 43 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. ஏலத்துக்கு, வரத்து அதிகரிப்பிருப்பினும், விலை உயர்ந்து வருகிறது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது, இந்த வாரம் முதல் தர கொப்பரை குறைந்த பட்ச விலையில் 1.7 ரூபாயும், அதிகபட்ச விலையில், 2.6 ரூபாய் உயர்ந்திருந்தது. இரண்டாம் தர கொப்பரைக்கு குறைந்தபட்ச விலையில், 50 பைசா சரிந்திருந்தது. அதிகபட்ச விலையில், 95 பைசாவும் உயர்ந்திருந்தது. தற்போது, கொப்பரை விலை உயரத்துவங்கியுள்ளதால், விவசாயிகள் மீண்டும் கொப்பரை உற்பத்தியை துவங்கியுள்ளனர். அடுத்த வாரம் நடக்கும் ஏலத்துக்கு வரத்து அதிகரித்தால், விலையில் மாற்றம் ஏற்படும்.இவ்வாறு, அதிகாரிகள் கூறினர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**9.03.2013 A.M**

## வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி

நாமக்கல், : நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 14ம் தேதி வெள்ளாடு வளர்த்தல் குறித்து இலவச பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 14ம் தேதி மாலை 4 மணிக்கு வெள்ளாடு வளர்ப்பு தொடர்பான இலவச பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது. இந்த பயிற்சியில் வெள்ளாடுகளின் இனம், அவற்றை தேர்வு செய்யும் முறை, கொட்டகை அமைக்கும் முறை போன்ற பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. விவசாயிகள் உட்பட அனைவரும் இந்த பயிற்சியில் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் வரும் 13ம் தேதிக்குள் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரிலோ அல்லது 04286 - 266345 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

இந்த தகவலை வேளாண் அறிவியல் நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மக்காச்சோளம் சாகுபடியில் ஏக்கருக்கு 3,000 கிலோ மகசூல் தொழில்நுட்பங்களை பின்பற்ற வேளாண் அதிகாரி அறிவுரை

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திர வட்டார வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி, வேளாண் அலுவலர் மதியரசன் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மக்காச்சோளம் கால்நடை தீவனம், சமையல் எண்ணெய் உள்ளிட்ட பல பொருட்கள் தயாரிக்க பயன்படுகிறது. இதில் கோ-1, கங்கா-5, கே.எச்-1, 2, 3, கோ.எச்.எம்-5, எம்-900, எம்.ஹைசெல், சின்ஜென்டா, என்.கே-6240, பயனீர்-30 வி-62, பயனீர்-30 வி-92 உள்ளிட்டவை முக்கிய வீரிய ஒட்டு ரகங்களாகும்.

ஏக்கருக்கு 6 கிலோ விதை பயன்படுத்த வேண்டும். விதை மூலம் பூசான நோயை தடுக்க ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோடெர்மாவிரிடி என்ற உயிரியல் பூசான கொல்லியை கலந்து 24 மணிநேரம் வைத்திருந்து பின் விதைக்க வேண்டும். இத்துடன் உயிர் உரவிதை நேர்த்தியும் செய்யவேண்டும்.

ஏக்கருக்கு 500 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியாவை ஆரிய வடி (அரிசி) கஞ்சியில் கலந்து அதனுடன் பூசன விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் அரை மணிநேரம் உலர்த்தி பின் 60 ஜ் 20 செமீ இடைவெளியில் ஒரு குழிக்கு ஒரு விதை வீதம் 4 செமீ ஆழத்தில் விதையை ஊன்ற வேண்டும். ஒரு சமீயில் 8 செடிகளும் ஒரு ஏக்கரில் 32,240 செடிகளும் இருக்குமாறு பயிர் எண்ணிக்கையை பராமரிக்கவேண்டும். விதைப்புக்கு முன் ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் அல்லது தென்னை நார் கழிவு உரம் இடவேண்டும். அத்துடன் நடவு வயலில் ஏக்கருக்கு 2 கிலோ அசோஸ்பைரில்லம், 2 கிலோ பாஸ்போபாக்டீரியா உயிர் உரங்களை 10 கிலோ நன்கு மக்கிய எரு மற்றும் 10 கிலோ மணலுடன் கலந்து இடவேண்டும்.

சாகுபடிக்கு பரிந்துரைக்கப்படும் 119 கிலோ யூரியா, 156 கிலோ சூப்பர்பாஸ்பேட், 34 கிலோ பொட்டாஷ் இதில் அடியுரமாக மட்டும் 30 கிலோ யூரியா, 156 கிலோ சூப்பர்பாஸ்பேட், 17 கிலோ பொட்டாஷ் இடவேண்டும். விதைத்த 25ம் நாள் முதல் மேலுரமாக 60 கிலோ யூரியா, 45ம் நாள் 29 கிலோ யூரியா, 17 கிலோ பொட்டாசும் இடவேண்டும்.

விதைத்த 3 நாட்களுக்குப்பின் மண்ணில் போதிய ஈரம் இருக்கும்போது களைக்கொல்லியான அட்ரசின் 50 சதவீதம் நனையும் தூள் 200 கிராம் அல்லது ஆலாகுளோ 1.6 லிட்டர்/ஏக்கர் என்ற அளவில் 360 லி தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான மூலம் தெளிக்கவேண்டும். களைக்கொல்லி பயன்படுத்தாவிடில் விதைத்த 17-18 நாளில் ஒருமுறையும் 40-45வது நாளில் ஒருமுறையும் களை எடுக்கவேண்டும்.

ஆரம்பக்கட்டத்தில் தென்படும் குருத்து புழு தாக்குதலை கட்டுப்படுத்த செடிக்கு 2 கிராம் வீதம் பியூரடான் குருனை மருந்தை மணலில் கலந்து செடியின் குருத்தில் விதைத்த 20வது நாள் இடவேண்டும். தேவைக்கேற்ப 6 முதல் 8 முறை நீர்பாசனம் செய்யவேண்டும். பூக்கும் தருணத்தில் தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு தொழில்நுட்பங்களை கடைப்பிடித்தால் ஒரு ஏக்கரில் 2,500 முதல் 3,000 கிலோ வரை மகசூல் எடுத்து ரூ.45,000 வரை வருமானம் பெறலாம். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## தென்மாவட்டத்தில் பருவம் தவறிய மழையால் நெல் வரத்து சரிந்தது

மதுரை, : பருவம் தவறிய மழை உள்ளிட்ட காரணங்களால் கடந்த ஆண்டை விட இந்தாண்டு நெல் வரத்து சரிந்துள்ளது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நெல் மூடைகள் மதுரை மாட்டுத்தாவணி நெல் வணிக வளாகத்திற்கு கொண்டு வரப்படுகிறது. மதுரை, தேனி, ராமநாதபுரம், சிவகங்கை, மேலூர்,

சிங்கம்புணரி நகரங்களில் மட்டுமல்லாது வடமாவட்டங்களில் இருந்தும் ஏராளமான நெல் மூடைகள் குவிவது வழக்கம். ஆனால் கடந்த ஆண்டை ஒப்பிடும்போது, இந்த ஆண்டு நெல்வரத்து மிகவும் சரிந்துள்ளது. இதுகுறித்து நெல் வியாபாரிகள் சங்க செயலாளர் டி.வி.ராஜா கூறியதாவது:

கடந்த ஆண்டை ஒப்பிடும்போது இந்த ஆண்டு வெறும் 20சதவீத நெல்தான் விற்பனைக்கு வந்திருக்கிறது. கடந்த முறை அரசு நெல் கொள்முதல் செய்தும், மதுரை வணிகவளாகத்தில் நெல் குவிந்தது. ஆனால் இம்முறை அரசு கொள்முதல் இல்லை. எனினும் நெல் வரத்து சரிந்திருக்கிறது. இப்போதைக்கு மதுரை மாவட்ட பகுதிகளில் இருந்து நெல் வருகிறது.

அடுத்து காஞ்சிபுரம், நெல்லை, திருவண்ணாமலை உள்ளிட்ட வெளிமாவட்டங்களில் இருந்து நெல் வரத்து இருக்கும். கடந்த மாதம் நெல் வரத்து சரிவால் விலை அதிகரித்தது. இந்த வாரம் வரத்து சற்று அதிகரித்து, விலையில் மூடைக்கு ரூ.200வரை சரிந்திருக்கிறது. ஒருநாளைக்கு 10ஆயிரம் மூடைகள் விற்பனைக்கு வருகிறது.

65கிலோ எடை கொண்ட மூடை கர்நாடகப் பொன்னி ரூ.1400லிருந்து ரூ.200க்கும், என்எல்ஆர், ஜேஜேஎல் போன்றவை ரூ.1200லிருந்து ரூ.1050க்கும், அட்சயா ரூ.1700லிருந்து ரூ.1350க்கும், ரூ.ஆயிரத்திற்கு விற்ற கல்சர் ரூ.850க்கும் விலை குறைந்து விற்கிறது என அவர் தெரிவித்தார்.

### அம்பை, வீரவநல்லூர் பகுதியில்தொடர் மழையால் 500 ஏக்கர் நெற்பயிர் நீரில் மூழ்கியது

அம்பை, : அம்பை, மணிமுத்தாறு, வீரவநல்லூர் பகுதியில் பெய்து வரும் தொடர் மழையினால் சுமார் 500 ஏக்கரில் பயிரிட்டிருந்த நெற்பயிர் நீரில் மூழ்கி நாசமானது.

நிகழ் பிசான பருவத்தில் தாமிரபரணி நதிக்கரையில் வடக்கு மற்றும் தெற்கு கோடைமேலழகியான் கால் வாய், நதியுன்னி கால்வாய், கன்னடியன் கால்வாய் பாசனத்தில் 18 ஆயிரத்து 500 ஏக்கரில் நெற்பயிரிடப்பட் டது. கர்நாடகா பொன்னி, அம்பை 16, ஆடுதுறை 45 போன்ற நெல் ரகங்களை விவசாயிகள் நடவு செய்த னர். தாமதமாக பயிர் செய்த விவசாயிகள் குறைந்த நாள் வித்தான ஆடுதுறை 45 ரகம் நடவு செய்துள்ளனர்.

பிசான பருவ அறுவடை தொடங்கிய நிலையில் அம்பை பகுதியில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையினால் அறு வடை பாதிக்கப்பட்டுள் ளது. அம்பை, கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர், மணிமுத்தாறு பகுதியில் தாமத மாக நடவு செய்த நெற்பயிர் கள் நீரில் மூழ் கின. இதில் கர்நாடகா பொன்னி, அம்பை 16 ரக நெற்பயிர்கள் அதிகமாக பாதிக்கவில்லை. ஆடுதுறை 45 ரக நெற்பயிர் மழையில் சாய்ந்து நீரில் மூழ்கி சேதமடைந்தன.

நீரில் மூழ்கி சேதமடைந்த நெற்பயிரை இனி வைக்கோலாக மட்டுமே பயன்படுத்த முடியும். நெற் பயிர் அறுவடை செய்ய முடியாத நிலையில் நெல் முளைக்கும் தருணத்தில் உள்ளது. அம்பை, கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர், சுற்று வட்டார பகுதியில் அறுவடைக்கு தயாராக இருந்த சுமார் 300 ஏக்கர் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன.

ஏர்மாள்புரம் விவசாயி முருகன் கூறுகையில், மணிமுத்தாறு, கீழ்முகம், ஏர்மாள்புரம், ஆலடியூர், செட்டி மேடு பகுதியில் அறுவடை செய்யாத நிலையில் ஆடுதுறை 45 ரக நெற்பயிர் சுமார் 200 ஏக்கரில் சாய்ந்து விட்டது. வயலில் தேங்கியுள்ள நீரை விவசாயிகள் வடிய வைத்து வருகின்றனர். இருந்தபோதிலும் நெல்லை காப்பாற்ற வாய்ப்பில்லை என்றார்.

வீரவநல்லூர் விவசாயி மகாலிங்கம் கூறுகையில், கன்னடியன் கால்வாய் பாசனத்தில் வீரவநல்லூர், கிரியம்மாள்புரம், அரிகேசவநல்லூர் பகுதியில் 80 சத வீதம் அறுவடை செய்யாத நிலையில் மழையால் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி உள்ளன. வயலில் தேங்கியுள்ள தண்ணீர் வடிய வைத்து அறுவடை செய்ய வேண் டும். பயிரில் நெல் மணிகள் காயாக உள்ள பருவத்தில் நீரில் மூழ்கியதால் நெல் விளைச்சல் முழுமை பெறாது. எனவே விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டுள் ளது என்று தெரிவித்தார்.

கடையநல்லூர்: கடையநல்லூர் பகுதிகளில் கடந்த 2 நாட்களாக தொடர் மழை பெய்து வருவதால் நெல் அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. கடையநல்லூர், சொக்கம்பட்டி, திரிகூடபுரம், காசிதர்மம், வட கரை உட்பட பல்வேறு பகுதிகளில் அறுவடைக்கு தயாராக இருந்த சுமார் ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் மழையினால் நீரில் மூழ்கியுள்ளன.

நெல் அறுவடை செய்தவர்களும் நெல்லை வீட் டிற்கு கொண்டுபோக முடி யாமல் தவித்து வருகின்ற னர். கடையநல்லூரில் அமைந்துள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 800 மெட்ரிக் டன் நெல் தான் சேமித்து வைக்க முடியும். எனவே நெல்லை சேமித்து வைக்க போதுமான இடம் இல்லாததால் விவசாயிகள் கடும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர்.

அறுவடை செய்யப்பட்ட நெற்பயிரை மழை நீரில் இருந்து காப்பாற்ற தார்பாயினால் மூடி வைத்துள்ளனர்.

## வரும் 15ம் தேதி விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 15ம் தேதி காலை 10.30 மணியளவில் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் மனோகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் பல துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் விவசாயம் சம்மந்தப்பட்ட கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர். எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயம் தொடர்புடைய கோரிக்கைகளை தெரிவித்து பயன்பெறலாம்.

இத்தகவலை புதுக்கோட்டை கலெக்டர் மனோகரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## கரும்பு சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு அறிமுகம் பாரி சர்க்கரை ஆலை தலைவர் தகவல்

ஆலங்குடி, : கரும்பு சாகுபடியில் புதிய தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி அதன் மூலம் விவசாயிகளின் வசதிக்கேற்ப செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என வல்லத்திராக்கோட்டையில் நடைபெற்ற கரும்பு நடவு திருவிழாவில் பாரி சர்க்கரை ஆலை தலைவர் ராதாகிருஷ்ணன் பேசினார்.

ஆலங்குடி அடுத்த வல்லத்திராகோட்டையில் ஈ.ஐ.டி பாரி சர்க்கரை ஆலை சார்பில் கரும்பு நடவுத் திருவிழா நடைபெற் றது. விழாவிற்கு குரும்பூர் சர்க்கரை ஆலையின் தலைவர் ராதாகிருஷ்ணன் தலைமை வகித்தார். துணைப் பொது மேலாளர் புண்ணியமூர்த்தி, ஊராட்சித் தலைவர் கணே சன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கரும்பு மகசூல் மேலாளர் சிவராமன் அனைவரையும் வரவேற்றார்.

இந்த கரும்பு நடவுத் திருவிழாவில் சர்க்கரை ஆலை தலைவர் ராதாகிருஷ்ணன் பேசுகையில், நவீன தொழில் நுட்ப கரும்பு சாகுபடி எளிமையாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் நடத்தப் படும் இத்தகைய நிகழ்வில் தொழில் நுட்பங்கள், வங்கிக் கடன், சாகுபடிக்கான ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. மேலும் தரிசு நிலங்கள் இருந்தால் அதில் கரும்பு சாகுபடிக்குத் தேவையான பிற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

கரும்பு சாகுபடியைப்போல அதனைப் பார்வையிடவும் கரும்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் படும். விரைவில் கரும்பு வெட்டுக் கூலி நிர்ணயிக்கப்படும். பயிர்க்காப்பீடு, ரசீது விவரங்கள் குறித்து ஒவ்வொரு நாளும் ஆலை அலுவலகத்தில் விளக்கம் அளிக்கப்படுகிறது. விவசாயிகளின் இன்றைய செயல்பாடுகளை ஆலை நிர்வாகம் ஏறகனவே சிந்தித்து செயல்படுத்தி வருகிறது. அன்றாடம் உள்ள புதிய தொழில் நுட்பங்களையும் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி அதன் மூலம் விவசாயிகளின் வசதிக்கேற்ப செயல்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகள் கரும்பு ஆலை நிர்வாகத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு

நிறைவு செய்யப்படும், என்றார்.

இவ்விழாவில் கரும்பு நடவுக்கு சொட்டுநீர்ப் பாசனம், செல்போன் மூலம் இயக்கப்படும் மோட்டார் ஸ்டார்ட்டர், தண்ணீரில் கரையும் உரம் அறுவடை இயந்திரம், டிராக்டர் மூலம் இயக்கப்படும் ஜெனரேட்டர், சொட்டு நீர்ப்பாசனக் கருவிகள் மற்றும் வங்கிகளின் செயல்பாடுகள் குறித்தும் கண் காட்சியில் விளக்கப்பட்டன.

நிகழ்ச்சியில் சொட்டுநீர்ப்பாசன மேலாளர் பிரான்சிஸ் சேவியர், கோட்ட அலுவலர் தமிழ்ச்செல்வன், ஐசிஐசிஐ வங்கி யின் திருச்சி மண்டல அலு வலர் ஜெகன்மோகன், இய ற்கை உர அலுவலர் முருகன் உள்ளிட்டோர் பேசினர்.

## விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிவாரண தொகை விவரத்தை தகவல் பலகையில் ஒட்ட வேண்டும் காங். விவசாய பிரிவு வலியுறுத்தல்

முத்துப்பேட்டை, : விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிவாரண தொகை விவரத்தை வேளாண் கூட்டு றவு வங்கிகளின் தகவல் பலகையில் ஒட்ட வேண்டும் என்று காங்கிரஸ் விவசாய பிரிவு வலியுறுத்தி உள்ளது.

திருவாரூர் மாவட்ட காங்கிரஸ் விவசாய பிரிவு தலைவர் இளங்கோவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திருவாரூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்குவதில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளது. நிலமற்றவர்கள் பல ஏக்கர் விவசா யம் செய்ததாகவும், குறைந்த அளவு நிலத்தில் விவசாயம் செய்தவர்கள் அதிக அளவில் விவசாயம் செய்ததாகவும் கிராம நிர்வாக அலுவலரிடம் போலியாக சான்று பெற்று பதிவு செய்துள்ளனர்.

இதனால் உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்கு குறைந்த அளவே நிவாரணம் கிடைக்கிறது.

ஒவ்வொரு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளும் விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை அரசு எவ்வளவு அளித்துள்ளது. அந்த தொகையினை விவசாயிகளுக்கு எவ்வாறு பங்கிட்டு வழங்குகிறார்கள் என்பதை தகவல் பலகையில் தமிழில் அச்சிட்டு விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும். மேலும் பல்வேறு கூட்டுறவு வங்கிகளில் அரசு ஒதுக்கிய நிவாரண தொகை யினை முழுமையாக கணக்கில் காட்டாமல், ஒரு குறிப்பிட்ட தொகையினை ஒதுக்கிக்கொண்டு மீதி தொகையினை விவசாயிகளுக்கு பங்கிட்டு வழங்குவததாகவும் விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

எனவே உயர் அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

### விவசாயிகள் பிரச்னைக்கு தீர்வு காண நேரடி நெல் கொள்முதல் நிலையம் தேவை

திருக்கோவிலூர், : விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு நெல் சீசன் துவங்கிய நாள் முதல் 10க்கும் மேற்பட்ட இடங்களில் நுகர்பொருள் வாணிப கழகத்தால் நேரடி நெல்கொள்முதல் நிலையம் துவங்கப்பட்டது. இவ்வாறு துவங்கப்பட்ட நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் விவசாயிகள் கொண்டு வரும் நெல்மூட்டைகளை உரிய பதத்திற்குண்டான விலை நிர்ணயம் செய்யப் பட்ட பின்னர் நெல்மூட்டைகளை கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணப்பட்டுவாடாவும் செய்யப்பட்டு வந்தது. இதனால் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் சீரான நெல் வரத்தும் அதற்கேற்றவாறு விலை நிர்ணயமும் செய்யப்பட்டு வந்தது.

இதனால் போக்குவரத்து பாதிப்பு, மறியல் போராட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் தவிர்க்கப்பட்டது. இந்த ஆண்டு நெல் வரத்து சீசன் துவங்கி இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகியும் இன்னும் விழுப்புரம் மாவட்டத்தில் நுகர்பொருள் வாணிப கழகத்தில் நேரடி நெல் கொள் முதல் நிலையம் துவங்கவில்லை. இதனால் விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகளும் கடலூர், திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகளும் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தையே நாடுகின்றனர். இவ்வாறு விவசாயிகள் ஒரே நேரத்தில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை நாடும் போது அங்கு விவசாயிகள் நெல்மூட்டைகளை வைப்பதற்கு போதிய இடவசதியில்லை.

அதுமட்டுமல்லாமல் விலை குறைவு, விளைபொருள் சேதம், கூலி பிரச்னை, வியாபாரிகள் கொள்முதல் செய்ய மறுப்பு போன்றவற்றினால் ஆவேசமடையும் விவசாயிகள் மறியல் உள்ளிட்ட போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். கடந்த ஒரு மாதமாக விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகளுக்கு ஒருவாரம், பதினைந்து நாட்கள் கழித்து தான் பணம் வழங்கப்படுகிறது. இதனால் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பல்வேறு பிரச்னைகள் ஏற்படுகிறது.

ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகளுக்கு ஏற்பட்டு வரும் பல்வேறு பிரச்னைகளை களைய கடந்த ஆண்டில் இருந்த இடங்களில் நேரடி நெல்கொள்முதல் நிலையம் துவங்க வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

தற்போது பிற மாவட்டங்களில் நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் நல்ல பதத்துடன்

சன்னரகம் அதாவது ஏ-கிரேடு நெல் குவிண் டால் ரூ.ஆயிரத்து 350 வரைக்கும், பி-கிரேடு நெல் குவிண்டால் ரூ.ஆயிரத்து 300 வரைக்கும் நெல் கொள்முதல் செய்ய விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதே நெல்ரகம் குவிண்டால் ரூ.ஆயிரம் முதல் ரூ.ஆயிரத்து 100வரை தான் கொள்முதல் செய்யப்படுகிறது.

ஆகையால் மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து விழுப்புரம் மாவட்டத்தில் நேரடி நெல்கொள்முதல் நிலையம் துவங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடவேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## 7,000 ஏக்கர் வாழை கருகும் அபாயம் மேட்டூரில் 1000 கன அடி தண்ணீர் திறக்கவேண்டும் தொட்டியம் விவசாயிகள் கோரிக்கை

தொட்டியம், : தொட் டியம் வட்டாரத்தில் கருகி வரும் 7,000 ஏக்கர் வாழை யை காப்பாற்ற மேட்டூர் அணையில் 1000 கனஅடி தண்ணீர் திறந்துவிட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொட்டியம் அருகே உள்ள வடகரை வாய்க்கால் நீர் மூலம் ஸ்ரீராமசமுத்திரத் தில் தொடங்கி எம்.புத்தூர், திருநாராயணபுரம், தொட் டியம், சீனிவாசநல்லூர், மகேந்திரமங்களம், மண மேடு உள்ளிட்ட பகுதி விளைநிலங்கள் சுமார் 10,400 ஏக்கர் பாசன வசதி பெறுகின்றன. அதே போன்று நாமக்கல் மாவட் டம், ஒருவந்தூரில் தொட ங்கி உன்னியூர், சின்னப்பள்ளிபாளையம், பெரியப்பள்ளிபாளையம், ஸ்ரீராமசமுத்திரம்,சீலைப்பிள்ளையார்புத்தூர், காட்டுப்புத்தூர், காடுவெட்டி, நத்தம் ஆகிய பகுதிகளில் 4,300 ஏக்கர் நிலங்கள் காட்டுப்புத்தூர் பிரதான வாய்கால் மூலம் பாசனம் பெறுகின்றன. இப்பகுதிகளில் அதிக அளவில் வாழை, வெற்றிலை, நெல் சாகுபடி செய்யப்படுகின் றன.

தற்போது நெல் அறு வடை முடிந்த நிலையில், 7,000 ஏக்கர் வாழை, 3,400 ஏக்கர் வெற்றிலை சாகுபடி நடக்கிறது. தண்ணீர் பற்றாக்குறையால் இவை கருகி வருகின்றன. இந்நிலையில், மேட்டூர் அணையிலிருந்து 300 கனஅடி தண்ணீர் மட்டுமே காவிரியில் திறந்து விட படுகிறது. இந்த தண் ணீர் நாமக்கல் மாவட்டம் ஜேடர்பாளையம் தடுப்பணையில் கூட்டு குடிநீர் திட்டத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. இதனால் காட்டுப்புத்தூர் வாய்கால் மற் றும் தொட்டியம் வடகரை வாய்காலுக்கு 100 கனஅடி தண்ணீர்கூட வருவதில்லை. எனவே கூடுதல் தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரி க்கை விடுத்துள்ளனர்.

வடகரை வாய்காலில் 2.10 மீட்டர் உயரத்துக்கு தண்ணீர் வந்தால் மட்டுமே தடையின்றி விவசாய நிலங் கள் பாசனம் பெறும். தற் போது 1.58 மீட்டர் உயரத் துக்கு தண்ணீர் மட்டுமே வருவதாக

விவசாயிகள் கூறுகின்றனர். காட்டுப்புத் தூர் வாய்க்காலில் 1.50 மீட் டர் உயரத்துக்கு பதில் 1.30 மீட்டர் உயரத்திற்கே வாய்க்காலில் தண்ணீர் வருகிறது. இந்நிலையில் மின் மோட் டார் மூலம் ஆங்காங்கே நீர் உறிஞ்சப்பட்டு காட்டுப்புத்தூர் வாய்க்கால் வற ண்டு விட்டது.

இது குறித்து காடு வெட்டி விவசாய சங்கத் தலைவர் பாலசுப்பிரமணி யன், பொறுப்பாளர் பெரு மாள் கூறுகையில், மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்படும் 300 கனஅடி தண் ணீரை 1000 கன அடியாக திறந்துவிட்டால் ஓரளவிற்கு வாழைகளை காப் பாற்ற முடியும். இதற்கு தமி ழக அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

### விவசாயிகள் சங்க கூட்டம்

திருவாரூர், : தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் திருவாரூர் மாவட்ட குழு கூட்டம் மாவட்ட தலைவர் கலியபெருமாள் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட செயலாளர் சுந்தரமூர்த்தி, விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் சாமியப்பன், விவசாயிகள் சங்க மாவட்ட பொருளாளர் சோம.ராஜமாணிக்கம், கரும்பு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் தம்பு சாமி, பால் உற்பத்தியாளர் கள் சங்க மாவட்ட செயலா ளர் ரத்தினம் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் மாவ ட்ட குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### ஒட்டன்சத்திரம் விவசாயிகளுக்கு துல்லிய பண்ணை திட்ட பயிற்சி

ஒட்டன்சத்திரம், : ஒட்டன்சத்திரம் பகுதி விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை சார்பில் துல்லிய பண்ணை திட்ட பயிற்சி அளிக்கப்பட்டது.

தோட்டக்கலை துணை அலுவலர் தனிக்கொடி வரவேற்றார். தோட்டக்கலை உதவி இயக்குநர் பழனிச்சாமி தலைமை வகித்து பயிற்சி நோக்கம் குறித்தும், திட்டம் குறித்தும் பேசினார்.

தடியன்குடிசை வேளாண் பல்கலைக்கழக தோட்டக்கலை ஆராய்சி நிலைய பேராசிரியர் ஆனந்தன், துல்லிய பண்ணையில் காய்கறி சாகுபடி முறைக, நவீன உத்திகள் பற்றி பயிற்சி அளித்தார்.

உதவி பேராசிரியர் செந்தில்குமரன், காய்கறி சாகுபடியில் நூற்புழு கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து பயிற்சி அளித்தார். தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய ஓய்வு பெற்ற அதிகாரி பரமேஸ்வரன், வெங்காய சாகுபடியில் துல்லிய பண்ணை தொழில்நுட்பம் குறித்து விளக்கமளித்தார்.

சொட்டுநீர் பாசன விற்பனை அலுவலர் பரத், சொட்டு நீர்பாசனம் அமைப்பு மற்றும் செயல்பாடு குறித்தும் பேசினார். எஸ்.கே. ஹைடெக் நர்சரி நிறுவனர் சிவக்குமார், குழித்தட்டு முறையில்

காய்கறி சாகுபடி நாற்றுகள் உற்பத்தி செய்வது குறித்து பயிற்சி அளித்தார்.

பங்கேற்ற 23 விவசாயிகளுக்கு இரண்டாம் நாள் கள பயிற்சியாக, சித்தையன்கோட்டை அருகே அழகர்நாயக்கன்பட்டி அழைத்து செல்லப்பட்டனர். அங்கு கிராமத்தில் 2 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள வீரிய ஒட்டுரக வெள்ளரி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த பயிற்சியை தான்யா அக்ரோபார்ம் நிறுவன மேலாளர் செல்வராஜ் வழங்கினார்.

தோட்டக்கலை வேளாண் உதவி அலுவலர் சவுந்திரராஜ் நன்றி கூறினார்.

ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலாகள் சந்திரசேகரன், முருகேசன்  செய்திருந்தனர்

## விவசாயிகள் உரிமம் பெற்ற கடைகளில் இருந்து விதைகளை வாங்க வேண்டும் விதை ஆய்வு துணை இயக்குனர் தகவல்

தஞ்சை

விவசாயிகள் உரிமம் பெற்ற கடைகளில் இருந்து விதைகளை வாங்க வேண்டும் என்று விதை ஆய்வு துணை இயக்குனர் கூறியுள்ளார்.

இது குறித்து தஞ்சை விதை ஆய்வு துணை இயக்குனர் மனோகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

போலி பருத்தி விதைகள்

தற்போது தஞ்சை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்துள்ளது. விவசாயிகள் கோடை சாகுபடிக்கு விதைகள் வாங்கும் போது கடைகளில் விதைக்கான விலைப்பட்டியலை அவசியம் கேட்டுப்பெற வேண்டும். விலைப்பட்டியலில் விதைக்கான பயிர், ரகம், குவியல் எண், காலாவதிநாள் ஆகிய விவரங்களை குறிப்பிட்டு பெற வேண்டும். மேலும் பாபநாசம், கும்பகோணம், திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஆகிய வட்டாரங்களில் பரவலாக பிடி பருத்தி பயிரை விவசாயிகள் ஆர்வத்துடன் சாகுபடி செய்து வருகிறார்கள். இந்த வாய்ப்பை பயன்படுத்தி சிலர் உரிமம் இன்றி போலியான பருத்தி விதைகளை உதிரியாக விற்பனை செய்வதாக தெரியவந்துள்ளது.

உரிமம் பெற்ற கடைகள்

எனவே விதை வாங்கும் போது விவசாயிகள் போலியான விதைகளை உதிரியாக வாங்காமல், உரிமம் பெற்ற கடைகளில் இருந்து மட்டும் தரமான விதைகளை உரிய விலைப்பட்டியலுடன் விவரங்களுடன் பெற்று சாகுபடி செய்ய வேண்டும். மேலும் வாங்கும் விதைகளில் குறை ஏதும் இருப்பதாக தெரியவந்தால் உடனடியாக விலைப்பட்டியலுடன் (பயிர்ரகம், குவியல் எண்,

காலாவதிநாள், விவரங்களுடன்) தஞ்சையில் உள்ள விதை ஆய்வு துணை இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

## தஞ்சை மாவட்டத்தில் சம்பா அறுவடை பணிகள் 1 லட்சம் எக்டேரை எட்டியது சராசரியாக 4081 கிலோ மகசூல் கிடைத்தது

தஞ்சை

தஞ்சை மாவட்டத்தில் சம்பாஅறுவடை பணிகள் 1 லட்சம் எக்டேரை எட்டியது. சராசரியாக 4 ஆயிரத்து 81 கிலோ மகசூல் கிடைத்து உள்ளது.

### நெற்களஞ்சியம்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். ஆனால் இந்த ஆண்டு போதிய மழை பெய்யாததாலும் குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படாததாலும் குறுவை சாகுபடி எதிர்பார்த்த அளவு நடைபெற வில்லை.

இதையடுத்து சம்பா சாகுபடி 1 லட்சம் எக்டேரை தாண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. அதன்படி 1 லட்சத்து 2 ஆயிரத்து 939 எக்டேரிலும், தாளடி 19 ஆயிரத்து 3 எக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டது. இதில் பல்வேறு இடங்களில் நெற்பயிர்கள் தண்ணீர் இன்றி கருகியது.

### அறுவடை பணிகள் தீவிரம்

இந்த நிலையில் நெற்பயிர்கள் விளைந்த இடங்களில் அறுவடை பணிகளும் தொடங்கி நடைபெற்று வருகின்றன. அதன்படி இதுவரை தஞ்சை மாவட்டத்தில் 79 ஆயிரத்து 682 எக்டேரில் சம்பா அறுவடை பணிகள் முடிவடைந்துள்ளன. தாளடி 10 ஆயிரத்து 330 எக்டேரிலும் அறுவடை என மொத்தம் 90 ஆயிரத்து 12 எக்டேரில் அறுவடை செய்யப்பட்டு உள்ளது. தற்போது 1 லட்சம் எக்டேர் அறுவடை பணிகள் நெருங்கி உள்ளது.

சம்பா சாகுபடியில் தற்போது 4 ஆயிரத்து 801 கிலோ எக்டேருக்கு மகசூல் கிடைத்து உள்ளது. மேலும் தஞ்சை மாவட்டத்தில் சம்பா பருவத்தில் வறட்சியினால் 50 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட பயிர் 12 ஆயிரத்து 249 ஏக்கர் என கணக்கிடப்பட்டு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வீதம் நிவாரணம் வழங்கப்பட்டு உள்ளது.

### உளுந்து வகைகள் இருப்பு

மேலும் தற்போது நடப்பு பருவத்தில் பயறுவகை சாகுபடிக்கு தேவையான உளுந்து விதைகள் 206 மெட்ரிக் டன் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன என வேளாண்மை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## வரத்து அதிகரிப்பால் கோவையில் அரிசி விலை வீழ்ச்சி: இட்லி அரிசி மூடைக்கு ரூ.300 குறைவு

கோவை

வரத்து அதிகரிப்பால் கோவையில் அரிசி விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இட்லி அரிசி மூடைக்கு ரூ.300 குறைந்துள்ளது.

பொன்னி அரிசி

கோவை மாவட்டத்தில் உள்ள அரிசி விற்பனை செய்யும் கடைகளுக்கு காங்கயம், திருப்பூர், திருச்சி, விழுப்புரம் உள்பட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து லாரிகள் மூலம் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இதைத் தவிர மேற்குவங்க மாநிலத்தில் விளையும் ஐ.ஆர்.20, கல்சர் ஆகிய அரிசி ரகங்களும் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கோவையில் கடந்த சில வாரங்களுக்கு முன் ரூ.3,800–க்கு விற்ற 75 கிலோ மூடை முதல் ரக பொன்னி அரிசி பழையது ரூ.100 குறைந்து தற்போது ரூ.3,700 ஆக விற்பனை ஆகிறது. ரூ.3,650–க்கு விற்பனை ஆன பி.பி.டி அரிசி (பாப்படலா) பழையது ரூ.150 குறைந்து ரூ.3,500–க்கு விற்பனை ஆகிறது.

அதிசிய பொன்னி

தற்போது புதிதாக விற்பனைக்கு வந்துள்ள புதிய ரக பாப்பட்லா அரிசி ரூ.2,600–க்கும், ரூ.2,800–க்கு விற்ற அதிசிய பொன்னி பழையது தற்போது ரூ.200 குறைந்து ரூ.2,600–க்கு விற்பனை ஆகிறது. தற்போது விற்பனைக்கு வரத் தொடங்கி உள்ளஅதிசிய பொன்னி புதியது ரூ.2,350 முதல் ரூ.2,400 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதே போல் கல்சர் பொன்னி புதியது ரூ. 1,900–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ரூ.2,000–க்கு விற்ற பவானி அரிசி தற்போது ரூ.400 குறைந்து ரூ.1,900–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இட்லி அரிசியை பொறுத்தவரை அதன் நுகர்வு அதிகமாக இருக்கும். தற்போது அதன் வரத்து அதிகரித்து வருவதால் விலை குறைந்துள்ளது. அதன்படி ரூ.2,250–க்கு விற்ற இட்லி அரிசி ரூ.300

வரை குறைந்து தற்போது ரூ.1,950–க்கு விற்பனை ஆகிறது. பச்சரிசி மற்றும் பிரியாணி அரிசியின் விலையில் எந்த மாற்றமும் இல்லை.

இது குறித்து கோவை மாவட்ட அரிசி வியாபாரிகள் சங்க தலைவர் சுல்தான், செயலாளர் சரவணகுமார், துணைத் தலைவர் ராஜ்குமார் ஆகியோர் கூறியதாவது:–

வரத்து அதிகரிப்பு

கடந்த சில நாட்களாக கோவையில் பருப்பு, புளி உள்பட பலசரக்கு பொருட்களைப் போல் பொதுமக்கள் ஒரு ஆண்டுக்கு தேவையான அரிசியை வாங்கி இருப்பு வைத்தனர். இதன் காரணமாக தற்போது அரிசி வாங்கும் தேவை குறைந்துள்ளது. மேலும் மாநிலத்தில் உள்ள பல்வேறு அரிசி அரவை ஆலைகளுக்கு அரவைக்காக வரும் நெல் அதிகரித்து வருகிறது.

இதனால் அரவை ஆலைகளில் உற்பத்தி ஆகும் அரிசி அதிகரித்து உள்ளது. இதன் காரணமாக வெளி மார்க்கெட்டுகளுக்கு விற்பனைக்கு வரும் அரிசியின் வரத்து அதிகரித்து விலை வீழ்ச்சி அடைந்து உள்ளது. வருகிற மாதங்களில் அரிசியின் விலை மேலும் உயர வாய்ப்பு குறைவு.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை ஒரேநாளில் 15 காசுகள் சரிவு 330 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்,

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக சரிவடைந்து வருகிறது. இந்த நிலையில் கடந்த 4–ந் தேதி நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலையை 345 காசுகளாக குறைக்க முடிவு செய்தனர்.

இதற்கிடையே நேற்று நடந்த கூட்டத்தில் முட்டை விலையை மேலும் 15 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 330 காசுகளாக குறைந்து உள்ளது.

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– ஐதராபாத்–320, விஜயவாடா, தனுகு–320, பார்வாலா–305, சென்னை–346, மைசூர்–345, பெங்களூர்–335, மும்பை–352, டெல்லி–335, கொல்கத்தா–345.

கறிக்கோழி கிலோ ரூ.50–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.2 உயர்த்த முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.52 ஆக உயர்ந்து உள்ளது. முட்டைக்கோழி விலை கிலோ ரூ.49 ஆக நீடிக்கிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.